முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1369

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

29.06.2023, வியாழக்கிழமை

1. அறம் காக்கும் ஞான வள்ளலே
அனுகுவோர் வினை போக்கும் கலியுக ஞானியே
வரம்தந்து மக்களை வாழவைக்கும்
வள்ளலே வாழுகின்ற தவசியே
2. தவசியே அரங்கனே உந்தனுக்கு
தக்கபடி ஞான அறிவுரை ஆசி
அவனியில் ஆறுமுகப்பெருமான் யானும்
அருளுவேன் சோபகிருது மிதுனத் திங்கள்
(சோபகிருது வருடம் ஆனி மாதம் 14 ம் நாள், 29.06.2023, வியாழக்கிழமை)
3. திங்களிலே அரங்கனின் சக்தி
தெய்வசக்தியாக ஆற்றல்பெருகி
ஓங்காரம்பட உலகமெல்லாம்
ஓங்கார ஞானம் பெருகவைக்கும்
4. வைக்குமப்பா அரங்கன் தர்மமே
மக்களை வாழவைத்து தர்மவான்களாக
ஞான வழிகளில் வந்து உலகோரெல்லாம்
ஞானிகளுமாக உருமாற அருள்புரியும்
5. அருள்பெறவே அரங்கனை நோக்கி
அன்பர்கள் பிரணவக்குடில் சார்ந்து வரவேணும்
இருள்விலகி வருவோரெல்லாம் இந்த கலியில்
ஏகாந்த ஜோதி நிலை தானடைந்து
6. அடைந்துமே அரங்கனோடு இணைந்த
ஆற்றல்மிக்க ஞானிகளாக
வரங்கள் பெருகி உலகோரெல்லாம்
வையகத்தில் ஞானயுக மாற்றத்தை

7. மாற்றத்தை கலியின் மாற்றமாக
மகத்துவம்பட செய்து அரங்கன் வழி
ஆற்றல்கூடி ஞான ஆட்சி தருவர்
அகிலத்தையே மீட்டு அற்புதம் படைப்பர்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–